**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Calendar | : | Sessions Case No.58 of 2020 |
| Miscellaneous | : | |
| Preliminary register | : | |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | : | Prosecution | : PW- 17 |
| | | Defence | : |
| | : | Court | : |

| | |
|---|---|
| Name | : M.Surendar |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of December 2023.**

முதல் விசாரணை எதிரிகள் ஆஜர் (கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

நான் தற்போது சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியர், அறுவை சிக்கிச்சை பிரிவில் நான் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.12.2018 அன்று ஆனந்தன் த/பெ அண்ணாமலை, நம்பியிர்பட்டி என்பவர் மேற்படி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். விடிய காலை 4 மணி அளவில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அப்போது பணியில் இருந்த மருத்துவர் அறுவை சிகிச்சை மருத்துவர் அவரை பரிசோதித்து அவர் காயங்களுக்கு CT ஸ்கேன் எடுக்கப்பட்டது. அதில் 2 வெளி துகள்கள் (Pellets) வயிற்றின் மேற்பகுதியிலும், அல்லையின் மேற்பகுதியில் இருந்தது. குடல் அறுவை சிகிச்சை மருத்துவரின் அறிவுறுத்தல் பெயரில் அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். மேற்படி 2 வெலி (Pellets) துகள்கள் மீட்கப்பட்டது. மேலும் குடல் உறுப்புகள் நல்ல நிலையில் உள்ளதா என்று உறுதி செய்யப்பட்டது. அவர் வலதுபக்க நெஞ்சியில் நுரையீரலின் மேற்பகுதியில் ரத்தம் சேர்ந்திருந்தது CT ஸ்கேன் மூலம் காணப்பட்டது. மேற்படி சேர்ந்து இருந்த ரத்தத்தை குழாயின் மூலம் அகற்றப்பட்டது. சிகிச்சை அளிக்கப்பட்டு 25.12.2018 அன்று சிகிச்சை வார்டில் இருந்து விடுவிக்கப்பட்டார். சிகிச்சையின் முடிவில் அவருக்குள்ள காயங்களின் தன்மை கொடுங்காயங்கள் என்று சான்று அளிக்கப்பட்டது. மேற்படி நோயாளி தருமபுரி மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக பரிந்துரைத்து அனுப்பப்பட்டு இருந்தார். மேற்படி நீக்கப்பட்ட 2 வெளி துகள்களை (Pellets) ஆய்வுக்காக உதவி மருத்துவர் அனுப்பியிருந்தார்.

குறுக்கு விசாரணை

மேற்படி மருத்துவமனையில் 16.12.2018 அன்று உதவி மருத்துவராக 5 நபர்கள் பணியில் இருந்தோம். காயம்பட்ட ஆந்தன் என்பவருக்கு சிகிச்சையில் இருந்த வரையில் முதன்மையான மருத்துவ சிகிச்சையினை மருத்துவர் சுரேஷ் பாபு என்பவர் அளித்து வந்தார். காயம்பட்ட ஆனந்தன் என்பவரது சிகிச்சை குறித்தும், காயங்கள் குறித்தும் அனைத்து முடிவுகளையும் மருத்துவர் சுரேஷ்பாபுவே கவனித்து வந்தார் என்றால் சரிதான். ஆனந்தனுக்கு குடல் அறுவை சிகிச்சையினை மருத்துவர் சுரேஷ் செய்து இருந்தார். அறுவை சிகிச்சை செய்து இருந்த மருத்துவரை விசாரணை செய்தால் தான் குண்டு பாய்ந்து இருந்ததின் தன்மையை கூற இயலும் என்றால் ஆமாம். காயம்பட்ட ஆனந்தனுக்கு ஏற்பட்டிருந்த வெளி புற காயங்கள் பார்த்து இருந்தேனா என்றால் பணி மருத்துவர்கள் விடுமுறையில் இருக்கும் போது மாற்று பணி செய்த வகையில் பார்த்துள்ளேன். ஆனந்தனுக்கு அல்லை பகுதியில் கீழ்புறமும், மேற்படி காயத்திற்கு சற்று பக்கவாட்டிலும், வெளி காயங்கள் இருந்தது. அக்கல் பகுதியில் இருந்து கீழே மார்புகாம்பு கிடைமட்டமாக பக்க வாட்டில் காயங்கள் இருந்தது. 2 காயங்களுக்கு இடையே எவ்வளவு இடைவேளை உள்ளது என்றால் இரண்டும் அருகே அருகே இருந்தது. காயங்களை நான் பார்த்த போது ஏறக்குறைய குணமாகி இருந்தது. இரண்டு காயங்கள் துளை காயங்கள் ஆகும். ஒரு நபரை பின்புறத்தில் இருந்து துப்பாக்கியால் சுடும் பொழுது சட்டையின் பின் பகுதியில் துளைக்களுக்கான அடையாளம் காணப்படும் என்றால் காணப்படும். இருந்தாக குறிப்பிடும் இரண்டு வெளி துகள் அக்கல் பகுதியில் இருந்ததா என்றால் அதில் ஒன்று பயனித்து நுறையீரலில் மேல் உள்ள தசையிலும் மற்றொன்று வயிற்று மேல் புறமும் வலதிலிருந்து இடது புறமாக பயணித்து சென்று இருந்தது. ஆனந்தனுக்கு மேற்படி காயங்கள் தவிர தீ காயங்கள் இருந்ததா என்றால் இல்லை, ஒரு சிராய்பு காயமும், அதனை சுற்றி வெப்ப வடு இருந்ததாக விபத்தின் பதிவேட்டில் இருந்து தெரிய வருகிறது. வலது மேல் கையில் சிறு, சிறு சிராய்ப்பு காயங்கள் இருந்தது. மேற்படி காயங்களை தவிர வயிற்று பகுதியிலோ அல்லை பகுதியின் கீழ் பகுதியிலோ எந்தவிதமான காயங்கள் இல்லை என்றால் சரிதான்.

(கற்றறிந்த **3-**ம் எதிர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி குக்கு விசாரணை அம்சங்களை ஏற்று கொள்வதாக தெரிவித்தார்).

SENTHIL KUMAR RAJAVEL

Subordinate Judge
Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uthangarai